மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.140/2023</u>

2026ம் ஆண்டு மார்ச் 05ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிச்சாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>05.03.2026 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் மட்டும் செய்து வருகிறேன். நான் எனது நிலத்தை மேம்பாடு செய்ய எனது நிலத்தில் தனிப்பட்ட முறையில் கிணறு, போர், தொட்டி, மின் இணைப்புகள் அமைத்துள்ளேனா என்றால் சோலார் மற்றும் தொட்டி ஆகியவற்றை அமைத்துள்ளேன். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் நீதிமன்றத்திற்கு வந்ததற்கு பின்னிட்டு தெரியும். எனது தாத்தா பெயர் சென்னிமலை கவுண்டர். எனது தகப்பனார் பெயர் நாச்சிமுத்து கவுண்டர்.

2. என் தாயார் பெயர் நல்லம்மாள். எனக்கும், வாதிக்கும் என்ன உறவு முறை என்றால் வாதி எனக்கு சித்தப்பா மகன் எனது தகப்பனாரும் எனது சித்தப்பாவான கருப்பண கவுண்டரும் வா.சா.ஆ.1 ஆன 1962 இல் ஒரு பாகப்பிரிவினை ஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள்

என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் அதில் ஏ அட்டவணை சொத்துக்கள் எனது தகப்பனாருக்கும் எனது தாயாருக்கும் கூட்டாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் கண்ட பி அட்டவணை சொத்துக்கள் என் சித்தப்பா கருப்பண கவுண்டருக்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்துப் பார்த்து உள்ளேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் தான் சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் வந்து பார்வையிட்டாரா என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு நான் ஆட்சேபனை ஏதேனும் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. நான் எனது சொத்தில் தெற்கிலிருந்து வடக்காக துணி துவைக்கும் கல், வாழைமரம் மற்றும் கம்பி வேலி கல், பைப் ஆகியவற்றை அமைத்துள்ளேன் என்றால் இல்லை நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் நான் எனது சொத்தில் தெற்கிலிருந்து வடக்காக துணி துவைக்கும் கல் வாழை மரம் மற்றும் கம்பி வேலி கல், பைப் ஆகியவற்றை அமைத்துள்ளது அமைத்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் கம்பி வேலி கல் எதுவும் அங்கு இல்லை நான் கம்பி வேலி கல் எனது சொத்தில் அமைக்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5. எனது பூமியில் தெற்கிலிருந்து வடக்காக நான் அமைத்துள்ள கம்பி வேலி கல் துணி துவைக்கும் கல் மற்றும் கற்கள், பைப் ஆகியவை

எனக்கும், வாதிக்கும் பாத்தியப்பட்ட பொதுத்தடத்திற்கு அதில் அமைத்துள்ளேன் என்றால் இல்லை பொதுத்தடத்திலிருந்து 10 அடி உள்ளே தள்ளி தான் எனது பூமியில் அமைத்துள்ளேன். எனது பூமியில் தென்வடலாக அமைக்கப்பட்டுள்ள கற்கள் 1962 இல் ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.1 ஆவணமான பாகப்பிரிவினை ஆவணம் நடைமுறைப்படுத்தப்பட்டதால் நடப்பட்ட அத்து கற்கள் என்றால் சரியல்ல. அங்கு மரங்கள் தான் உள்ளது.

6. தாவா 2 அயிட்ட சொத்தான தடத்திற்கு அடியில் பைப் லைன் அமைக்கப்பட்டுள்ளது என்றால் முதலில் வாய்க்கால் இருந்தது பின்னிட்டு பைப்லைன் அமைக்கப்பட்டுள்ளது. அந்த பைப் லைன் வாதியின் 1வது அயிட்ட பூமிக்கு செல்கிறதா என்றால் ஆமாம் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குறையில் கடந்த 60 ஆண்டுகளாக வாதி 2வது அயிட்ட சொத்தான தடத்தை அனுபவம் செய்து வரவில்லை என்று நான் சொல்லியுள்ள சங்கதிகளை பொறுத்து நிரூபணம் செய்யும் வகையில் நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா தடத்தை வாதி அனுபவம் செய்வதை பொறுத்து எனக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆட்சேபனை எதுவும் இல்லை.

7. எனக்கு ஆட்சேபனை இல்லை என்று நான் சொல்லி உள்ளதால் வாதி தாவாவில் கோரி உள்ளபடி நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் பெற உரிமை உள்ளவர் என்று சொன்னால் சரியல்ல. எனது பூமிக்கு கிழபுறம் உள்ள வாதிக்கு பாத்தியப்பட்ட 3வது அயிட்ட சொத்தை வாதி அனுபவம் செய்வதை பொறுத்து எனக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

8. அதனால் அதைப் பொறுத்து வாதி கோரி உள்ள பரிகாரத்தை அடைய உரிமை உள்ளவர் என்று சொன்னால் சரியல்ல. தாவா 2 வது மற்றும் 3 வது அயிட்ட சொத்துக்களை வாதிதான் அனுபவம் செய்து வருகிறார் என்பது எனக்கு நன்கு தெரிந்தும் மேற்படி சொத்துக்களை வாதி அனுபவம் செய்து வருவதை பொருத்து எனக்கு ஆட்சேபனை இல்லை என்று நான் தெரிவித்துள்ள நிலையில் வாதிக்கு தாவாவில் கோரியுள்ள நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.03.05 19:09:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்